Published on June - 17 - 2021 in Dinamalar.

# கிரிம்சன் நிறுவனம் சார்பில் கிராம மக்களுக்கு நிவாரண உதவி



கடலூர் முதுநகர் சிப்காட் கிரிம்சன் மற்றும் பாரிஜாத் நிறுவனத்தின் சார்பில் நிர்வாக இயக்குனர் ரமேஷ் பிரபாகர் ஈச்சங்காடு கிராமத்தில் பொதுமக்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கினார். அருகில் மாவட்ட கவுன்சிலர் முத்துக்கிருஷ்ணன்.

**கடலூர், ஜூன் 17–** கடலூர் சிப்காட் கிரிம்சன் நிறுவனம் சார்பில், ஈச்சங்காடு, குடிகாடு ஊராட்சி பகுதியில் 800 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

கடலூர் சிப்காட்டில் அமைந்துள்ள கிரிம்சன் ஆர்கானிக் நிறுவனம், பாரிஜாத் நிறுவனம் இணைந்து, ஈச்சங்காடு மற்றும் குடிகாடு ஊராட்சி பகுதியில் 3 கிராம மக்களுக்கு, கொரானோ ஊரடங்கால் நிவாரண உதவியாக 800 குடும்பங்களுக்கு அரிசி மற்றும் நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியை கிரிம்சன் நிர்வாக இயக்குனர் ரமேஷ் பிரபாகரன் துவக்கி வைத்தார். மனிதவள மேலாளர் சீனிவாசன், மாவட்ட கவுன்சிலர் முத்துக்கிருஷ்ணன், குடிகாடு கவுன்சிலர் ஆனந்தன், மணி, திரிசங்கு, செந்தாமரைக் கண்ணன், வார்டு உறுப்பினர் ஜீஜாவாகனன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.